பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 10 2026 TUESDAY 6.30 PM**

<u>மாநிலச்செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1)** தேசிய பாதுகாப்புக்கு ராணுவப்படையினரும், அறிவியல் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

**2)** மத்திய இணையமைச்சர் பதவியை டாக்டர் எல். முருகன் ராஜினாமா செய்துள்ளார்.

**3)** தமிழகத்தில் **4** ஆயிரத்து **724** செவிலியர் பணியிடங்கள் நிரப்பப் பட்டுள்ளதாக மாநில அமைச்சர் திரு அருண்ராஜ் கூறியுள்ளார்.

**4)** அதிக விலைக்கு வெளிச்சந்தையிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கான தமிழக அரசின் நடவடிக்கைக்கு திமுக, அஇஅதிமுக, தேமுதிக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

**5)** டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

தேசிய பாதுகாப்புக்கு ராணுவப்படையினரும், அறிவியல் நிறுவனங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய ராணுவ கல்லூரியில் பயிற்சி மேற்கொண்டவர்களுடன் கலந்துரையாடிய அவர், நாட்டின் பாதுகாப்பில் நவீன தொழில்நுட்பத்தின் பங்கு இன்றியமையாதது என்று கூறினார்.

சைபர் பாதுகாப்பு, விண்வெளி தொழில்நுட்பம், உயிரி தொழில்நுட்பம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்று அவர் தெரிவித்தார்.

மத்திய அரசின் ஆராய்ச்சி மேம்பாட்டு புத்தாக்கத் திட்டத்தின்கீழ், பாதுகாப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் தேசிய பாதுகாப்பில் பயன்படுத்தப்பட்டு வருவதாக திருமதி திரௌபதி முர்மு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்திய இணையமைச்சர் பதவியை டாக்டர் எல். முருகன் ராஜினாமா செய்துள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில், திரு நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், பாரத மாதாவுக்கும், தமிழ்நாட்டுக்கும் சேவையாற்றியது தன் வாழ்வின் மிகப்பெரிய கௌரவமாக கருதுவதாக குறிப்பிட்டுள்ளார்.

2029-ஆம் ஆண்டு மக்களவை தேர்தலை முன்னிட்டு அடிமட்ட அளவில் களப்பணி ஆற்றவும், கட்சித் தொண்டர்களுடன் இணைந்து செயல்படவும், தமிழகத்தில் பிஜேபி-ஐ வலுப்படுத்துவதற்கும் முழுநேரமாக ஈடுபடுத்திக் கொள்ள விரும்புவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முதலில் தேசம், அடுத்ததாக கட்சி, இறுதியாகவே சுயநலம் என்று தாம் கருதுவதாகவும், தமது பதவி விலகல் கடிதத்தில் டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் 4 ஆயிரத்து 724 செவிலியர் பணியிடங்கள் நிரப்பப் பட்டுள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், நேர்மையான முறையிலும், வெளிப்படைத்தன்மையுடனும் செவிலியர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

***(Sound Byte — அருண்ராஜ் - 44 Sec. )***

<<<<<<>>>>>>

மார்பக புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சேலத்தில் ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு மாணவர்கள் பின்னோக்கி நடைப்பயணம் மேற்கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட தனியார் மருத்துவக்கல்லூரி டீன் டாக்டர் செந்தில்குமார், 95 சதவீதம் மார்பக புற்றுநோய் சிகிச்சை மூலம் குணப்படுத்த முடியும் என்று கூறினார்.

***(Sound Byte — செந்தில்குமார் - 24 Sec. )***

மார்பக புற்றுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக இந்த நடைபயணம் மேற்கொண்டதாக இதில் பங்கேற்ற மாணவி வித்யாஸ்ரீ தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — மாணவி - 18 Sec - )***

<<<<<<>>>>>>

மின்சாரத்தை அதிக விலைக்கு வெளிச்சந்தையிலிருந்து வாங்குவதற்கான தமிழக அரசின் நடவடிக்கைக்கு திமுக, அஇஅதிமுக, தேமுதிக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

திமுக தலைவர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், யூனிட்டுக்கு 35 ரூபாய் கொடுத்து வெளிச்சந்தையிலிருந்து மின்சாரம் வாங்குவதற்கான தமிழக அரசின் முயற்சியை குறை கூறியுள்ளார்.

கடந்த ஆட்சியில் குறைந்த விலைக்கு மின்சாரம் வாங்கிய ஒப்பந்தங்களை ரத்து செய்துவிட்டு, தற்போதைய அரசு நாட்டிலேயே மிக அதிக விலைக்கு மின்சாரம் வாங்கப்போவதாக அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒரு யூனிட் மின்சாரம் வாங்க அதிக விலையில் ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது ஏற்கனவே கடன் சுமையில் சிக்கியுள்ள தமிழக மின்சார வாரியத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறியுள்ளார்.

யூனிட் ஒன்றுக்கு **35** ரூபாய் என்ற மிக அதிக விலையில் மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தேமுதிக பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில், தனியாரிடம் ஒரு யூனிட் மின்சாரத்தை **35** ரூபாய்க்கு வாங்க வேண்டிய அவசியம் என்ன என்று வினவியுள்ளார்.

<<<<<<>>>>>>

தசரா பண்டிகையையொட்டி தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்களை இயக்க உள்ளது.

தாம்பரத்திலிருந்து வரும் வெள்ளிக்கிழமை இரவு **11** மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், ஞாயிற்றுக்கிழமை காலை மணி **7.45**-க்கு மேற்குவங்க மாநிலம் **Santragachi** சென்றடையும்.

வரும் வெள்ளிக்கிழமை காலை மணி **6.15**-க்கு போதனூரிலிருந்து புறப்படும் சிறப்பு ரயில், ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மணி **1.30**-க்கு **Barauni** சென்றடையும்.

நாளை காலை மணி **7.40**-க்கு போதனூரிலிருந்து புறப்படும் சிறப்பு ரயில், மறுநாள் இரவு **8** மணிக்கு **Kharagpur** சென்றடையும்.

**Kharagpur**-லிருந்து நாளை மறுநாள் இரவு **11** மணிக்கு புறப்படும் சிறப்பு ரயில், சனிக்கிழமை காலை மணி **8.45**-க்கு சென்னை எழும்பூர் வந்தடையும்.

<<<<<<>>>>>>

தமிழக கடலோர மாவட்டங்களில் அடுத்த **24** மணிநேரத்திற்கு மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — வி ஆர் துரை 46 Sec.)***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் தலைமையில் கல்வி அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்டம் சென்னையில் இன்று நடைபெற்றது.

---------------

தென்காசி மாவட்டத்தில் சுமார் ரூ.**4** கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு மாநில அமைச்சர் டாக்டர் ராஜீவ் இன்று வழங்கினார்.

-------

தஞ்சாவூரில் சர்வதேச பேரிடர் அபாய குறைப்பு தினத்தை முன்னிட்டு, நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திருமதி ரேவதி தொடங்கிவைத்தார்.

----------------

திருவண்ணாமலையில் பிரதமரின் மேற்கூரை சூரிய மின் திட்டத்தின் மூலம் வீடுகளில் மேற்கூரைகளில் சோலார் பேனல் அமைப்பதற்கான விழிப்புணர்வு முகாம் இன்று திருவண்ணாமலையில் நடைபெற்றது

----------

அஞ்சல் துறை சார்பில் சென்னை தெற்கு கோட்ட அளவிலான வாடிக்கையாளர் குறைதீர்ப்பு முகாம் வரும் 27-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

---------------

சென்னை பெருநகர மாநகராட்சி பகுதிகளில் ஒருமுறை பயன்பாட்டு நெகிழிப் பொருட்களின் தடை அமலாக்கத்தை கண்காணிப்பதற்கான சிறப்புப் பணிக்குழுவின் 3-ஆவது கூட்டம், மாநகராட்சி ஆணையர் திரு சமீரன் தலைமையில் இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **21-17, 16-21, 21-19** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Natsuki Nidaira -**வை வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஸ்ரீகாந்த் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளர்.

முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **22-20, 21-19** என்ற செட் கணக்கில் பிரான்சின் **Andre Merkle-**ஐ வென்றார்.

-------------

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் போட்டியில், தமிழகத்திற்கு எதிரான மூன்றாம் நாள் ஆட்டநேர இறுதியில் ராஜஸ்தான் இரண்டாவது இன்னிங்சில் **4** விக்கெட் இழப்பிற்கு, **81** ரன் எடுத்துள்ளது.

ஜெய்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்சில் **274** ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

ராஜஸ்தான் முதல் இன்னிங்சில் **363** ரன் எடுத்தது.

<<<<<<**END**>>>>>>